கழகத் தலைவர் பிறந்தநாளை முன்னிட்டு - சைதையில் "முதல்வர் கோப்பை"

தமிழ்நாட்டின் முன்னணி கபடி வீராங்கனைகள் பங்கேற்கும்

மாநில அளவிலான மின்னொளி கபடி போட்டி!

திரைப்பட முன்னணி நடிகர்கள் தொடங்கி வைக்கின்றனர்

மாவட்ட கழகச் செயலாளர்-அமைச்சர்

மா.சுப்பிரமணியன் அறிவிப்பு !

05 பிப்ரவரி 2026
மாலை 5.30 மணி

சிறப்பு விருந்தினர்கள்

புரட்சி நடிகர் **சத்யராஜ்**

மனத்தி P.கணேசன்
கபடி வீரர் - பைசன் திரைப்படத்தின் நிஜ கதாநாயகன்

06 பிப்ரவரி 2026
மாலை 5.30 மணி

சிறப்பு விருந்தினர்கள்

எம்.எஸ்.பாஸ்கர்
தேசிய விருது பெற்ற குணச்சித்திர நடிகர்

இளவரசு
குணச்சித்திர நடிகர் - ஒளிப்பதிவாளர்

07 பிப்ரவரி 2026
மாலை 5.30 மணி

சிறப்பு விருந்தினர்

வைகைப்புயல் வடிவேலு
நகைச்சுவை நடிகர்

கலைமாமணி **தேவயானி**
திரைப்பட நடிகை

மேற்கண்ட நிகழ்ச்சி சென்னை, சைதாப்பேட்டை, சென்னை மாதிரி பள்ளியில் நடைபெற உள்ளது. எனவே கழகத் தலைவர் பிறந்தநாளை முன்னிட்டு நடைபெறவுள்ள மின்னொளி கபடிப் போட்டியில் பல்லாயிரக்கணக்கில் தி.மு.கழகத் தோழர்கள் பங்கேற்றிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

- சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க

விமானிகள் பற்றாக்குறை இல்லையென பொய் கூறும் ஒன்றிய அரசு!

மக்களின் உயிருடன் விளையாடாமல் உரிய நடவடிக்கை எடுக்க கே.இ.பிரகாஷ் வலியுறுத்தல்!

புதுடெல்லி, பிப். 3-

விமானப் போக்குவரத்து துறையில் நிலவும் கடுமையான விமானிகள் பற்றாக்குறை குறித்து, நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

விமானங்களுக்கான விமானிகள் விகிதம் (Pilot Aircraft Ratio) பற்றி ஆய்வு நடத்தப்பட்டுள்ளதா, அதன்படி விமானிகளின் எண்ணிக்கையை கூட்டுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா என்று கேட்டிருந்தார்.

இதற்கு ஒன்றிய அரசின் தரப்பில் மக்களின் கண்முன்னாலேயே இருக்கும் நடைமுறை உண்மைகளை மறைக்கும் கயமையான பதில்களே கிடைத்துள்ளன. இதன் மூலம், மக்களின் பாதுகாப்பு மீது தங்களுக்கு எந்த அக்கறையும் இல்லை என்பதை ஒன்றிய அரசு சொல்லாமல் சொல்லியுள்ளது.

விமானிகள் பற்றாக்குறை இல்லை என பச்சைப்பொய்:

ஒன்றிய அரசு தனது பதிலில் "விமானிகள் பற்றாக்குறை இல்லை" எனக் கூறியுள்ளது. ஆனால், கடந்த மாதம் தான் இண்டிகோ நிறுவனம் 6000க்கும் மேற்பட்ட விமானங்களை ரத்து செய்தது. விமானிகள் பற்றாக்குறை இல்லை என்றால், எப்படி இத்தனைப் பெரிய அளவில் விமானச் சேவைகள் முடக்கப்பட்டது? லட்சக்கணக்கான பயணிகள் விமான நிலையங்களில் தவித்ததை ஒரு மாத காலத்திற்குள் மறைத்து இப்படி பொய்ப் பேசலாமா?

விமானப்போக்குவரத்து அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு அவர்களின் கூற்றின் படி, இந்தியாவில் தற்போது 834 பயணிகள் விமானங்கள், 8000 விமானிகளோடு இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவரே சொல்கிறார், ஒவ்வொரு விமானத்துக்கும் தலா 10 முதல் 15 விமானிகள் தேவை என்று. இதன் படி பார்த்தால், ஏறக்குறைய 834 பயணிகள் விமானங்களுக்கு 12500 விமானிகள் வேண்டும். ஆனால், தற்போது 8000 விமானிகளே இயங்குகிறார்கள். இதற்குப் பெயர் பற்றாக்குறை அல்லாமல் வேறு என்ன?

மேலும், வரும் ஆண்டுகளில் 1700 விமானங்கள் வாங்க ஆர்டர் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், இதற்காக, 25000 முதல் 30000 விமானிகள் வேண்டும் என்றும் அவரே தான் சொல்லியிருக்கிறார். இதைக் கணக்கிலெடுத்தால், பற்றாக்குறையின் எண்ணிக்கை எங்கேயோ செல்கிறது.

இருக்கும் விமானங்களுக்கும் போதுமான விமானிகள் இல்லை, வாங்கப்போகும் விமானங்களுக்கும் போதுமான விமானிகளுக்கான உறுதி இல்லை. ஆனால், விமானிகள் பற்றாக்குறை இல்லை என பொய்ப்பேசி ஏமாற்றுகிறது ஒன்றிய அரசு.

விமானப் பயிற்சி மையங்கள் மற்றுமொரு பொய், திசைதிருப்பல்:

விமானப் பயிற்சி மையங்களை அதிகப்படுத்த விதிகளை உருவாக்கியிருக்கிறோம், பயிற்சிகளை மேற்பார்வையிட்டு வருகிறோம் என்று சொல்லியிருக்கிறது ஒன்றிய அரசு. ஆனால், நடைமுறை நிலவரங்கள் இந்திய விமானப் பயிற்சி சூழலின் வேறு முகத்தைக் காட்டுகின்றன.

வல்லுநர்களின் தரவுகளின் படி, இந்தியாவில் தற்போது இருக்கும் 50க்கும் குறைவான பயிற்சி மையங்களால், ஆண்டுக்கு 800 முதல் 1000 விமானிகளையே உருவாக்க முடியும். ஆனால், அமைச்சரின் கூற்றுப்படி 2500030000 விமானிகள் என்ற எண்ணிக்கையை அடைய, வரும் ஆண்டுகளில் இந்தியாவின் தேவையோ ஆண்டுக்கு 2000 3000 விமானிகள். ஆகவே, பாதி அளவில் கூட விமானிகளை உருவாக்க முடியாத நிலையில் தான் இந்த விமானப் பயிற்சி மையங்களின் சூழல் தற்போது உள்ளது.

இந்தியாவில் ஒருவர் பயணிகள் விமானி ஆக வேண்டுமானால், 70 முதல் 90 லட்சம் வரை செலவழிக்க வேண்டிய நிலை உள்ளது. இதற்கான முக்கியக் காரணம், இந்திய விமானப் பயிற்சி மையங்களின் தரமின்மை. இதனால், வெளிநாடுகளை விட இரும்மடங்கு காலம் செலவழித்து முடிக்க வேண்டிய நிலை உள்ளது. இதை முறைப்படுத்தி பயிற்சிக்காலத்தை வேகப்படுத்த ஒன்றிய அரசிடம் எந்த திட்டமும் இல்லை.

மேலும், பயிற்சி முடித்த விமானிகளுக்கு CPL (Commercial Pilot License) உரிமம் வழங்குவதிலும் நிறைய தாமதம் நிலவுகிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், DGCAவில் நிலவும் ஆள் பற்றாக்குறை. இதனால், பல விமானிகள் உரிமத்திற்காக காத்திருக்கிறார்கள்.

நிலைமை இப்படியிருக்கிறது. ஆனால், ஒன்றிய அரசு விதிகளை வகுத்திருக்கிறோம், மேற்பார்வையிட்டு வருகிறோம்' என்று சமாளிப்புப் பதில்களை அளித்துக் கொண்டிருக்கிறது.

விமானிகள் பற்றாக்குறை பயணிகள் உயிருக்கான நேரடி ஆபத்து:

விமானிகள் பற்றாக்குறை என்பது வெறுமனே வேலை வாய்ப்பு சம்பந்தப்பட்ட பிரச்சனை அல்ல. இது, விமான நிறுவனங்கள் Shift Rotation ல் சமரசம் செய்து கொள்ள வைக்கிறது. இதனால், விமானிகளின் பணிச்சுமையும், அவர்களின் மன அழுத்தமும் பலமடங்கு அதிகரிக்கிறது. விளைவாக, விமானப் பயணிகளின் பாதுகாப்பு கத்திமுனையில் கொண்டு வந்து நிறுத்தப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் விமானிகளின் சோர்வு குறித்து DGCAவுக்கு வரும் புகார்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. அவர்கள் தூக்கக் கலக்கத்தில் பயணிப்பது, மயங்கி விழுவது, உடல்நிலை பாதிக்கப்படுவது ஆகியவற்றைப் பற்றிய செய்திகளும், ஆய்வுகளும் ஊடகங்களில் வெளிவந்தபடியே இருக்கின்றன.

ஆனால், ஒன்றிய அரசு இதில் தனக்கு எந்தப் பொறுப்பும் இல்லை என்பதைப் போல அனைத்தையும் கண்மூடி வேடிக்கைப் பார்த்து அமர்ந்திருக்கிறது.

விமானிகளின் எண்ணிக்கையை பலமடங்கு உயர்த்த வேண்டியது மிக மிகக் கட்டாயம். அதற்கு உரிய அளவிலான பயிற்சி மையங்கள், அதன் ஆள் போதாமைகளைக் களைவதற்கான திட்டங்கள், DGCAவின்பற்றாக்குறை பிரச்சனையை சரிசெய்து, உரிமம் வழங்குவதை துரிதப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளை விரைந்து செயல்படுத்த வேண்டும்!

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி
மண்டலம்-9

ம. அ. 9. ந. க. எண். இ2 / 00553 / 2026 **இரண்டு உறை முறையில் மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

உதவி ஆணையர் (மண்டலம்-9) அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி - **மண்டலம்-9, பகுதி -25, வார்டு - 126** - 2வது பிரதான சாலை, R.A.புரம், வன்னியம்பதி பகுதியில் சாலையோர புதிய பூங்கா அமைக்கும் பணி

பணியின் மதிப்பு **ரூ.54.12** இலட்சம்,	முன்வைப்பு தொகை **ரூ.54,500/-**

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **16.02.2026** அன்று மாலை **3:00** மணி வரை
ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **17.02.2026** அன்று மாலை **3.30** மணியளவில்

மேலும் விவரங்களுக்கு **https://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 651 / ஒப்பந்தப்புள்ளி / 2026 **உதவி ஆணையர் (ம-9) (முதுநிலை)**

கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையில் – திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி

மாணவிக்கு அதிநவீன நரம்பியல் சிகிச்சை - உயிர் காப்பாற்றப்பட்டது!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, பிப்.3

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (02.02.2026) சென்னை சைதை கிண்டி, கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில், திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மாணவி சின்பனிஸ்ரீ (வயது 21) என்பவருக்கு அதிநவீன நரம்பியல் சிகிச்சை வழங்கப்பட்டு உயிர் காப்பாற்றப்பட்டுள்ளது, இதனைத்தொடர்ந்து மருத்துவப் பயனாளியை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை

முதலமைச்சர் அவர்களால் கடந்த 15.06.2023 அன்று திறந்து வைக்கப்பட்ட கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை இன்றைக்கு தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளை காட்டிலும் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளை காட்டிலும், அதிநவீன மருத்துவ உபகரணங்களை பெற்றிருக்கின்றது. உயர்சிறப்பு மருத்துவமனை என்கின்ற காரணத்தினால் இந்த மருத்துவமனையில் தனியார் மருத்துவமனைகளில் இல்லாத அளவிற்கான உயர்சிறப்பு மருத்துவக் கருவிகள் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, இங்கு இடம்பெறச் செய்யப்பட்டிருக்கிறது.

குறிப்பாக ஆட்டோ எம் ஆர்ஐ (Auto MRI), டபுள் பலூன் எண்டோஸ்கோபி (Double Baloon Endoscopy), ஓல்மியம் லேசர் (Holmium Laser), ஐபெக் Hyperthermic Intraperitoneal Chemotherapy (HIPEC), ஐபிரிடு கேத்லேப் (Hybrid Cathlab), வெட்ரிகுள் லேப் (Vertigo lab) போன்ற அதிநவீன வசதிகள் இம்மருத்துவமனையில் இடம் பெற்றுள்ளது. தமிழ்நாட்டில் ஒரு சில தனியார் மருத்துவமனைகளில் மட்டுமே இடம் பெற்றிருக்கும் இது போன்ற அதிநவீன மருத்துவ உபகரணங்கள் இந்த மருத்துவமனையில் மக்களின் பயன்பாட்டிற்கு தொடர்ச்சியாக சேவையாற்றி வருகிறது. இந்த மருத்துவமனை தொடங்கப்பட்ட நாள்முதல் பல்வேறு வகையிலான மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் கடந்த டிசம்பர் திங்கள் 15ஆம் தேதி திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் 3 ஆம் ஆண்டு பயின்று வந்த மாணவி சின்பனிஸ்ரீ (வயது 21) தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். 7.5% இடஒதுக்கீட்டில் திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்து கடந்த 3 ஆண்டுகளாக மருத்துவப் பட்டப் படிப்பு பயின்று வருகிறார். அவருக்கு திடீரென்று 2025 டிசம்பர் திங்கள் 15 ஆம் தேதி கடுமையான தலைவலியும், கண்பார்வை மங்கலாக ஏற்பட்டு கண்பார்வை திறன் குறைந்து தன்னுடைய நண்பர்களை கூட அடையாளம் கண்டுபிடிக்காத நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை நிர்வாகம் அவருக்கு மூளையில் ஸ்கேன் செய்து பார்த்தது. அவரது குடும்பத்தார் மேல் சிகிச்சைக்காக திருச்சியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அந்த தனியார் மருத்துவமனையில் பரிசோதனை செய்த பிறகு, அவரை மீண்டும் திருச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

இந்த நிலையில் திருச்சி மருத்துவக்கல்லூரியில் உள்ள மருத்துவர்களும், இதற்குரிய சிறப்பு மருத்துவ உபகரணங்கள் சென்னை கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் இருக்கிறது என்று சொல்லி, இம்மருத்துவமனையில் அவரை சேர்த்திருக்கிறார்கள். இவருக்கு டிசம்பர் 18, 2025 அன்று DSA (Hybrid flat pannel DSA) பரிசோதனை செய்யப்பட்டு இரத்தநாள சிதைவு உறுதி செய்யப்பட்டிருக்கிறது. உடனடியாக ஆனிக்ஸ் (Onyx) என்னும் நவீன திரவம் மூலம் இரத்தக் கசிவை தடுக்கும் எம்போலைசேஷன் (Embolisation) சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டது.

இந்த சிகிச்சைக்குப் பிறகு இம்மாணவிக்கு திடீரென்று வலிப்பு மற்றும் மயக்கம் ஏற்பட்டிருக்கிறது. அவசர ஸ்கேன் பரிசோதனையில் மூளையின் பிற பகுதிகளிலும் இரத்தக் கசிவு இருப்பது தெரிந்து காலதாமதம் இல்லாமல் அவருக்கு மண்டை ஓடு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு இரத்த உறைவு அகற்றப்பட்டது. ஏறத்தாழ 2.78 அடி அளவில் மண்டை ஓடு அகற்றி அவருக்கு மருத்துவச் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. இவர் 21 நாள் வெண்டிலேட்டரில் இருந்தார்.

இப்படி பல்வேறு வகைகளில் சிகிச்சை பெற்று வந்த அந்த மாணவி தற்போது முழு சுய நினைவுடன் மற்றவர்களை பார்க்கும் திறனும், அடையாளம் கண்டு அவர்களுடன் பேசும் திறனையும் பெற்றிருக்கிறார். இது மிகப் பெரிய சாதனை. மருத்துவத்துறை வரலாற்றில் இந்த சாதனை என்பது சாதாரணமல்ல. இந்த சிகிச்சை தனியார் மருத்துவமனைகளில் செய்ய வேண்டும் என்றால் ரூ.15 இலட்சத்திற்கும் மேல் ஆகும்.

அந்த வகையில் உடனடியாக முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின்கீழ் (CMCHIS) இந்த சிகிச்சையை முற்றிலும் இலவசமாக செய்து அந்த மாணவியின் உயிர் காப்பாற்றப்பட்டிருக்கிறது. இந்த சாதனையை இம்மருத்துவமனையில் இருக்கின்ற மருத்துவக் குழுவினர் மிகச் சிறப்பாக செய்து மருத்துவத்துறை சாதனையில் இடம் பெறச் செய்திருக்கிறார்கள். இந்தச் சிகிச்சைக்கு காரணமான மருத்துவர்களையும், செவிலியர்களையும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் குறிப்பாக முதலமைச்சர் அவர்களின் வாழ்த்துக்களோடு அவர்களை பாராட்டுகிறோம்.

சிகிச்சை முறைகள்

இந்த மருத்துவமனை தொடங்கப்பட்ட நாள்முதல் தற்போது வரை 4,51,788 புற மருத்துவ பயனாளர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள். மேலும் 1,47,885 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட உள்பயனாளர்களாக இன்றைக்கு பயன்பெற்றிருக்கிறார்கள். இந்த மருத்துவமனையில் மட்டுமே 13,945 அறுவை சிகிச்சைகள் வெற்றிகரமாக செய்யப்பட்டிருக்கிறது. 16,16,226 இரத்த பரிசோதனைகள், 13,043 சிடி ஸ்கேன் பரிசோதனைகள், 11,639 எம்ஆர்ஐ பரிசோதனைகள், 3,986 எண்டோஸ்கோப்பி பரிசோதனைகள், 14,369 டயாலிசிஸ் சிகிச்சைகள், 2,104 ஆஞ்சியோ பிளாஸ்டிக் மற்றும் பேஸ்மேக்கர் சிகிச்சைகள் என்று மிகச் சிறப்பாக செய்யப்பட்டு இலட்சக்கணக்கான மக்கள் பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள்.

அந்த வகையில் இந்த மருத்துவமனையின் சேவை என்பது மிகப் பெரிய அளவில் இன்றைக்கு பயன் தந்துக் கொண்டிருக்கிறது. இந்த மருத்துவமனையில் இதுநாள்வரை 7,85,838 மருத்துவ பயனாளர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள் .

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி, நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் மரு.சுரேஷ்பாபு, ஊடுருவல் கதிரியக்க நிபுணர் மரு.பெரியகருப்பன், மயக்க மருந்து நிபுணர் மரு.கார்த்திகேயன், நோடல் அலுவலர் மரு.ரமேஷ் மற்றும் மருத்துவக் குழுவைச் சார்ந்த மருத்துவர்கள், செவிலியர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.